Tamil Nadu Special Police

*451 Q.—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Tamil Nadu Special Police and the Special Armed Police are to be merged in this State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மலபார் சிறப்புக் காவற்படையும் படைக் கலந்தாங்கிய சிறப்புக் காவற்படையும் தமிழ் நாடு சிறப்புக் காவற்படையெனப் பெயரிடப்படவேண்டுமென 1968 மே மாதம் அரசு ஆணையிட்டது. இந்தச் சிறப்புக் காவற்படைகளின் அணிப்பிரிவுகள் இந்த மாநில அரசால் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒன்றாக இணைக்கும் வினாவிற்கு இடமில்லை. பொதுவான பணி விதிகளை வகுப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசிடமிருந்து பெற்ற அரிசி

*458 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70-ம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைத்த அரிசியின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1969 ஆம் ஆண்டில் மத்திய அரசு மாநில அரசுக்கு 80,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்தது. மாநில அரசுக்கு 79,642 டன் அரிசி மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிடமிருந்து அரிசி வழக்கமாக ஒதுக்கப்பட்ட அளவுதானா இது அல்லது வறட்சியை முன்னிட்டு, அதிகப்படியான அரிசி ஒதுக்கப்பட்டதா? அப்படி அதிகமாக ஒதுக்கியிருந்தால், அதன் அளவு என்ன என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் குறிப்பிட்ட 79,642 டன் அதிகமாக மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு கொடுத்தது தான்.

DR. H. V. HANDE: Usually Tamil Nadu gets rice from Andhra State and sends rice to Kerala State. Is this under instructions from the Centre and has the Centre been approached for getting adequate Andhra rice for the City of Madras? Are we now getting enough rice from Andhra State to Madras City, especially Nellore rice?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிடத்திலிருந்து நாம் அரிசி கேட்கும்போது, ஆந்திராவிலிருந்து அல்லது வேறு வேறு மாநிலங்களிலிருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்பதில்லை. பற்றாக் குறைக்கு ஏற்றபடி 3 லட்சம் டன் தேவை என்று கேட்டதற்கு அவர்கள் 79,642 டன் கொடுத்தார்கள். ஆந்திரா அரிசி வருகிறதா என்று கேட்டார்கள், சட்டப்படி ஆந்திரா அரிசி வருவதில்லை.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ப்ரோகன் ரைஸ், மற்ற தானியங்கள் . . .

1970 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மத்திய சர்க்காரிலிருந்து நாம் பெற்ற அரிசியைப் பற்றிய கேள்வி.

திரு. டி. மார்ட்டின் : அதைத்தான் கேட்க வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைக் கேளுங்கள்.

THIRU T. MARTIN : Now I want to know whether this Government is permitting rice dealers to export . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலிருந்து இது வராது.

THIRU T. MARTIN : This will come under export and import.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநில அரசு பெற்ற அரிசி பற்றிக் கேளுங்கள்.

திரு. டி. மார்ட்டின் : இதுவும் அரிசி பற்றித்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசி பற்றியில்லை; மத்திய சர்க்காரிலிருந்து நாம் பெற்ற அரிசி பற்றிய கேள்வி.

THIRU T. MARTIN : When the Hon. Minister is ready to answer the question. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தயாராக இருந்தாலும், அதற்கு பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவேண்டும் என்று இல்லை.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether there is any direction issued by the Central Government regarding the export of broken rice or rice from this State to any other State and whether this Government permits private dealers to export them?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ. நோ. இந்தக் கேள்விக்கு விடை சொல்லத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒன்று கேள்வியை நீக்க வேண்டும், அல்லது கேள்விக்கு பதில் சொல்லவேண்டும். பதில் சொல்லாமல் விட்டால், நான் சொல்லவில்லை என்று ஆகாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வி முறையில்லை என்றுதான் பொருள்.

திரு. கே. வினயகம் : சார், இந்த ஆண்டு நம்முடைய மாநிலத்திற்கு ஏதாவது உபரியாக மத்திய சர்க்கார் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விட்டு இருக்கிறதா ? எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படியொன்றும் அவசியம் இல்லை என்பதால் நாம் வேண்டுகோள் விடவில்லை.